**அரக்கோணம் நகராட்சி**
**மன்ற கூட்ட அறிவிப்பு**

கூட்ட எண். 21 நாள் 23.02.2018.

பொருள் : மன்றக் கூட்டம் – அரக்கோணம் நகராட்சி – நாள் 28.02.2018 புதன் கிழமை முற்பகல் 10.00 மணிக்கு கூட்டம் நடைபெறுதல் – சம்மந்தமாக.

-----

அரக்கோணம் நகராட்சி 28.02.2018 புதன் கிழமை முற்பகல் 10.00 மணிக்கு ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் தலைமையில் நடைபெற உள்ள மன்ற கூட்டத்தில் கொண்டு வரப்படவுள்ள மன்றப்பொருள் விவரம்.

ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்
அரக்கோணம் நகராட்சி

பொருள் எண் :01

நகராட்சி ஆணையாளர் (ம) நகராட்சி பொறியாளர் அவர்களின் ஜனவரி/2018 மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு: மன்றம் பதிவு செய்யலாம்.**

**பொருள் எண் :02**

அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள ஆழ்துளை கிணறுடன் கூடிய கைப்பம்புகள் அவ்வப்போது பழுது ஏற்படுவதால் பொது மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய கைப்பம்பு உதிரிபாகங்கள் வாங்க வேண்டியுள்ளது. இதற்கான தோராய மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்படி வேலைக்கும் அதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவதற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

**அலுவலக குறிப்பு: 1) மன்றம் அனுமதிக்கலாம்.**

**2) மேற்படி உதிரிபாகங்கள் அரசு அங்கீகாரம் பெற்ற டான்சி நிறுவனத்தில் வாங்க மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண்.887/2017/இ1**

**பொருள் எண்.03**

நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு வண்டி எண்.TN73W5969 என்ற வாகனத்திற்கு அவ்வப்போது ஏற்படும் பழுது வேலைகளை சரி செய்யவும் மற்றும் வருடாந்திர காப்பீட்டு பிரிமியம் செலுத்தவும் தோராய செலவினம் ரூ.2.00 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கும் தொகைக்கும் நகரமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண்.1410/14/இ1**

**பொருள் எண் :04**

இந்நகராட்சியில் பொதுசுகாதார ‘C’ பிரிவில் துப்புரவு பணியாளராக பணிபுரியும் M. நாகபூஷணம் என்பவர் தனது சுய தேவைக்காக இரு சக்கரம் வாகனம் வாங்கிட வாகன முன்பணக்கடனாக ரூ. 50,000/– கோரியுள்ளார், இதனை பிரதி மாத ஊதியத்தில், அரசு இன்றைய தேதியில் விதிக்கப்பட்டுள்ள வட்டியுடன் பிடித்தம் செய்து கொள்ளவும் பணியாளர் கோரும் வாகன முன்பணக்கடன் வழங்கிடவும் மன்றத்தின் அனுமதிக்கும் ஒப்புதலுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம்.**

ந,க,எண், 192/B3/2018

**பொருள் எண் :05**

அரக்கோணம் நகராட்சி எல்லைக்குட்பட்ட அரக்கோணம் வட்டம் காவனூர் சாலையில் பழைய சர்வே எண். 120/1 நகரளவு வார்டு எண் எண்–‘C பிளாக் எண்–1 புதிய நகரளவு எண் 10/12ல் 1.00 ஏக்கர் நஞ்செய் நில தாவா சொத்து உரிமை சம்மந்தமாய் O.S. No. 15/2018ன் பேரில் வாதி திருமதி. B. கஸ்தூரி அரக்கோணம் நகராட்சியை 10வது பிரதிவாதியாக சேர்ப்பித்து அரக்கோணம் சார்பு நீதிமன்றத்தில் தொடர்ந்துள்ள வழக்கு சம்மந்தமாக வந்துள்ள சம்மன் பெறப்பட்டுள்ளது. மேற்படி வழக்கு தொடர்பாக அரக்கோணம் நகராட்சி ஆணையாளர் சார்பில் சார்பு நீதிமன்றத்தில் ஆஜராகி வழக்கை நடத்தி தரக்கோரி நகராட்சியின் வழக்கறிஞர் திரு. K. வேணுகோபால் MA.BL., அவர்களிடம் வழக்கை ஒப்படைக்கவும், அதற்காகும் செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகின்றது.

**அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**பொருள் எண் :06**

அரக்கோணம் நகராட்சிக்கு சொந்தமான கீழ்கண்ட குத்தகை இனங்களின் உரிமக்காலம் 01.04.2018 முதல் 31.03.2019 மற்றும் 2019–2021 ஆண்டுக்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமம் வழங்க 21.02.2018 ஒப்பந்த புள்ளி / பொது ஏலம் கோரப்பட்டது இனம் 1,3,மற்றும் 4 வரை ஏலம்/ஒப்பந்தப்புள்ளி எவரும் கோரவில்லை

<table>
<tr><th>வ.<br>எண்.<br>1.</th><th>குத்தகை இனம்<br>2</th><th>ஏல கேள்வி தொகை<br>3</th><th>ஏல கேள்வி தொகை.<br>4</th></tr>
<tr><td>1.</td><td>பேருந்து நிலையத்தில் வரும் பேருந்துகளுக்கு தினசரி சுங்கம் வசூல் செய்யும் உரிமம்</td><td colspan="2">இனம்–1 ஏலம் கோர எவரும் முன் வரவில்லை</td></tr>
<tr><td>2.</td><td>புதிய பேருந்து நிலைய பொது கட்டண கழிப்பிடம் மற்றும் குளியலறை கட்டணம் வசூல் செய்யும் உரிமம்.</td><td>G. ரவி<br>த/பெ. கோபண்ணா<br>அருணாச்சலம் தெரு<br>அரக்கோணம் Rs.<br>1,78,000/–</td><td>திருமதி S. ஆதிலாட்சுமி<br>க/பெ. சுப்ரமணி<br>74. ABM சர்ச் முதல் தெரு, பழனிப்பேட்டை, அரக்கோணம்<br>Rs. 1,78,000/–</td></tr>
<tr><td>3.</td><td>நாளங்காடியில் உள்ள கட்டண கழிப்பிடத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம்.</td><td colspan="2" rowspan="2">இனம் 3 மற்றும் 4 ஏலம் கோர எவரும் முன் வரவில்லை</td></tr>
<tr><td>4.</td><td>ஆடு, மாடு அடிக்கும் இடத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம்.</td></tr>
</table>

வரிசை எண்.2க்கான குத்தகை இனத்திற்கு திரு. G. ரவி__மற்றும் S. ஆதிலட்சுமி ஆகியோர் ஏலம் கோரியுள்ளனர்.

மேற்படி ஏலத்தில் இனம் 2–ல் உள்ள இனங்களுக்கு முன்று ஆண்டு சராசரி தொகை ரூ. 160771–ஐ விட ரூ. 17239 கூடுதலாகவும், சென்ற ஆண்டு ஏல தொகை ரூ.168663/–ஐ விட 9337/– அதிகமாகவும் உள்ளது.

ஆகவே குத்தகை இனம் 2 புதிய பேருந்து நிலைய பொதுக் கழிப்பிடம் (ம) குளியலறை கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு உச்ச ஏலக கேள்வித் தொகை ரூ. 1,78,000/–ஐ ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

மேலும் வ.எண்.1,3,4. குத்தகை இனங்கள் யாரும் ஒப்பந்தபுள்ளி /பொது ஏலம் கோராததால் மறு ஒப்பந்தபுள்ளி/பொது ஏலம் கோர அனுமதிக்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:– அ) வ.எண்.2 புதிய பேருந்து நிலைய கட்டண கழிப்பறை (ம) குளியலறை கட்டண வசூலிக்கும் உரிமத்திற்கு உச்ச ஏலக் கேள்வித் தொகை ரூ. 1,78,000/-ஐ கேட்டுள்ள திருமதி. S. ஆதிலட்சுமியின் ஏல கேள்வியிணை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.**

**ஆ) வ.எண். 1,3,4. குத்தகை இனங்கள் மீது மறு ஒப்பந்தப்புள்ளி / பொது ஏலம் கோரவும் மன்றம் அனுமதிக்கலாம்.**

**பொருள் எண் :07**

அரக்கோணம் நகராட்சியில் TURIIP 2016-2017 திட்டத்தின் கீழ் சாலைப் பணிகள் நடைபெற்று வருகிறது. மேலும் இந்நகராட்சியில் தற்சமயம் பாதாள சாக்கடை திட்டப் பணிகள் முடிவுற்ற சாலைகளில், சாலை பணிகள் அமைக்க முற்படும் போது UGD Manholes உயர்த்தி அமைக்க வேண்டிய அவசியம் உள்ளது. இப்பணிகளை செய்ய TURIP 2016-2017 மதிப்பீட்டில் வழிவகை ஏதும் இல்லை. எனவே, மேற்படி சாலைகளில் UGD Manholes-ஐ உயர்த்தி கட்டி தர மதிப்பீடு TURIP 2016-2017ன் இரண்டு சிப்பங்களுக்கும் சேர்த்து ரூ. 2,50 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணியைச் செய்வதற்கும் செலவினம் ரூ. 2.50 இலட்சம் பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்**

**ந.க.எண்.1666/2017/இ1**

**பொருள் எண் :08**

அரக்கோணம் நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையத்தில் உள்ள VAMBAY திட்டத்தின் கீழ் 2006ல் கட்டப்பட்டு தற்போது கழிப்பிடம் பழுதடைந்து உள்ளதால் பொதுமக்கள் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. கழிப்பிடத்தின் கதவுகள், water closet's, டைல்ஸ், மின் இணைப்புகள் மற்றும் ஆழ்துளைக்கிணறு, தண்ணிர் குழாய்கள், மின்மோட்டர் ஆகியன பழுதடைந்து உள்ளதால் அவற்றை பராமரிப்பு பணிகள் செய்து நவீனப்படுத்தி பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரவேண்டியுள்ளது, எனவே, இப்பணிகளை செய்ய மதிப்பீடு ரூ. 4.00 ,இலட்சித்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது பணியின் அவசியத்தை முன்னிட்டு நகராட்சி பொது நிதி 2017–2018ன் கிழ் கழிப்பிட பராமரிப்பு பணிகள் செய்வதற்கும் செலவினம் ரூ. 4.00 ,இலட்சத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்**

**ந.க.எண்.887/2017/இ1**

**பொருள் எண் :09**

அரக்கோணம் நகராட்சி அலுவலக வளாகத்தில் உள்ள நில அளவையா் (Surveyor) கட்டிடம், ஜெனரேட்டர் கட்டிடம் பழுதடைந்து மேல் கூரை உடைந்து உள்ளது. இதனால் கோப்புகள் பாதுகாப்பாக வைக்க இயலாத நிலையிலும், ஜெனரேட்டர் அறையில் மேல் கூரை உடைந்து உள்ளதால் ventilator இல்லாத நிலையிலும் உள்ளது. எனவே, Surveryor கட்டிடம், ஜெனரேட்டர் கட்டிடம் மராமத்து பணிகள் செய்து புதியதாக கூரைகள் அமைக்க மதிப்பீடு ரூ. 4.50/– இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு பணியின் அவசியத்தை முன்னிட்டு நகராட்சி பொது நிதி 2017–18ன் கீழ் பணியை செய்யவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-1.மன்றம் அனுமதிக்கலாம்,**
**2.பணியின் அவசியத்தை முன்னிட்டு நகராட்சி பொது நிதி 2017–18ன் கீழ் செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண்.887/2017/இ1**

**பொருள் எண் :10**

அரக்கோணம் நகராட்சிக்கு சொந்தமான சில்வர்பேட்டை உரக்கிடங்கில் தூய்மை இந்தியா திட்டம் 2016–2017ன் கீழ் திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. எனவே, சில்வர் பேட்டை உரக்கிடங்கில் உள்கட்டமைப்பு பணிகளை செய்ய வேண்டி உள்ளதால் உரக்கிடங்கில் உள்ள தேங்கிய குப்பைகளை அகற்றி அருகில் ஆழமாக பள்ளம் எடுத்து அதில் குப்பைகளை கொட்டி Gravel நிரப்பி, உரங்கிடங்கை சமன் செய்ய மதிப்பீடு ரூ. 7.00 இலட்சித்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த பணியினை நகராட்சி பொது நிதி 2017–2018ன் கீழ் பணியைச் செய்வதற்கும், செலவினம் ரூ. 7.00 இலட்சித்திற்கு பொது நிதியில் இருந்து மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்**

**ந.க.எண்.887/2017/இ1**

**பொருள் எண் :11**

அரக்கோணம் நகராட்சிக்கு சொந்தமான ABM சர்ச் நகராட்சி பள்ளியில் நடை பாதையில் கூடுதலாக Inter Lock Paver Block பணிகள் செய்து பள்ளியை தூய்மையாக வைத்துக்கொள்ள வேண்டிய அவசியம் உள்ளது. எனவே மேற்படி பணிகளுக்கான மதிப்பீடு ரூ. 1,10,000/-க்கு தயாரிக்கப்பட்டுள்ளது. பணியின் அவசர அவசியம் கருதி மேற்கண்ட பணியை கல்வி நிதி 2017–18ன் கீழ் செய்வதற்கும் செலவினம் ரூ. 1,10,000/-க்கு கல்வி நிதியில் இருந்து மேற்கொள்வதற்கும் மன்றம் அனுமதி பெறலாம்.

**அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்**

**ந.க.எண்.887/2017/இ1**

**பொருள் எண் :12**

அரக்கோணம் நகராட்சிக்கு சொந்தமான ஜீப்ளி ரோடு மேல்நிலை நீர்தேக்க தொட்டி அருகில் இயங்கிவரும் ICDS (ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மையம்) மையத்தை குழந்தைகளின் நலன் கருதியும் பாதுகாப்பு கருதியும் அருகில் உள்ள போலாட்சியம்மன் கோயில் நகராட்சி பள்ளியில் இடம் மாற்றியமைக்க, அதற்கான Partition பணி மற்றும் தற்காலிக shed அமைக்க மதிப்பீடு ரூ. 1,30,000/-;க்கு தயாரிக்கப்பட்டுள்ளது. இந்தப் பணியின் அவசர அவசியம் கருதி மேற்கண்ட பணியைச் செய்வதற்கும் செலவினம் ரூ. 1,30,000/–ஐ கல்வி நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்**

**ந.க.எண்.887/2017/இ1**

**பொருள் எண் :13**

அரக்கோணம் நகராட்சிக்கு சொந்தமான கல்லாறு நீரேற்றும் நிலையத்தில் உள்ள அலுவலக கட்டிடம் 30 ஆண்டுகளாக பராமரிப்பு செய்யாத காரணத்தால் மிகவும் பாழடைந்த நிலையல் உள்ளது. ஆகவே, கல்லாறு நீரேற்று நிலைய கட்டிடத்தில் சுவர் பூச்சு, டைல்ஸ், பெயின்டிங் மற்றும் மின்சார பணிகள் செய்ய வேண்டிய அவசியம் உள்ளது. மேற்படி கட்டிடத்தை 2017–18ம் ஆண்டுக்கு மராமத்து பணிகள் செய்யவும், Pipe line பாதுகாப்பு பணிகள் செய்யவும், ஆழ்துளை குழாய் கிணறுகளை பாதுகாக்க மேடைகள் அமைக்கவும் மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-1.மன்றம் அனுமதிக்கலாம்,**
**2.பணியின் அவசியத்தை முன்னிட்டு நகராட்சி குடிநீர் நிதி 2017–18ன்கீழ் செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.**

**பொருள் எண் :14**

மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர், வேலூர்–12, அவர்களின் கடித ந.க.எண்.3123/2017/ஆ1 நாள்.04.01.2018ல் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு விழாவிற்கு விளம்பர பேனர்கள் அமைக்கப்பட்டதற்கு நகராட்சிகளின் பங்குத் தொகை ரூ.7600/– + ரூ.1368 (சரக்கு சேவை வரி)= ரூ.8968/–ஐ செலுத்த கோரியுள்ளதற்கு நகர மன்ற தீர்மான எண்.227 நாள்.31.10.2017ல் ரூ.50000/–க்கு அனுமதி அளிக்கப்பட்டதில் கீழ்க்கண்ட செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| 1. நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் விளம்பர பதாகைகள் அமைக்கப்பட்டதற்கு | ரூ.33000.00 |
| 2. நகராட்சி அலுவலகத்தில் அலங்கார விளக்கு மற்றும் ஒலி அமைத்தல் | ரூ. 9400.00 |
| மொத்தம் | ரூ.42400.00 |

நகர மன்ற தீர்மானத்தில் அனுமதி வழங்கப்பட்டுள்ள தொகை ரூ.50000/—த்தில் செலவினம் ரூ.42400/—போக மீதம் உள்ள தொகை ரூ.7600/— மட்டுமே உள்ள நிலையில் கூடுதலாக கோரியுள்ள தொகை ரூ.1368/—ஐ (சரக்கு சேவை வரி) செலுத்த தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று வழங்கப்பட்டதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு: 1) மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண்.1241/2017/இ1**

**பொருள் எண் :15**

அரக்கோணம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு.A, பிளாக்.2, ந.அ.எண்கள், . 10/1பி1, 1பி2, 1பி4, 3,4 மற்றும் 10/5—ல் உள்ள 1.33¾ ஏக்கர் பரப்பளவிலான இடத்தில் அமைக்கப்பட்டுள்ள அனுமதியற்ற மனைப்பிரிவினை ம.வ/ந.ஊ.து.இ (வே.ம) வரன்முறைப்படுத்துதல் எண். 51 (R) /2018 என எண்ணிட்டு கீழ்கண்ட நிபந்தனைளுடன் கொள்கை அளவிலான மனைப்பிரிவு ஒப்புதல் அளித்து வரப்பெற்றுள்ள நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ) வேலூர் மண்டலம் அவர்களின் கடிதம் ந.க.எண்.2243/2017/வேம3 நாள். 19.01.2018 நகர மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

1. மனைப்பிரிவு மொத்த பரப்பு : 58261.50 சதுர அடி (அ) 5414.63 ச.மீ (அ) 1.33 ¾ ஏக்கர்
2. மனைப்பிரிவில் அமைந்துள்ள மொத்த மனைகளின் எண்ணிக்கை : 31
3. விற்கப்பட்ட மனைகள் (1—3, 5, 10,11,15, 16, 16எ, 17, 17ஏ, 18—21, 21ஏ, 23—25 மற்றும் 27) : 20 (31990 சதுர அடி)
4. விற்கப்படாத மனைகள் 4, 6—9, 12, 12எ, 13,14, 22 மற்றும் 26. : 11 (16900 சதுர அடி)
5. விற்பனை செய்யப்படாத மனைகளுக்கான பூங்கா ஒதுக்கீடு இடம் (மனை எண்.09) : 1710.00 சதுர அடி (10.11 %)
6. விற்கப்படாத மனைப்பிரிவு சாலைகள் மற்றும் பூங்கா ஒதுக்கீடு இடங்கள் உள்ளாட்சிக்கு உரிமையானதாகும்.
7. Online Registration No. DTCP/L/0022791/2017 dated 31.10.2017 ன்படி விற்கப்படாத 11 மனைகளுக்கான கூராய்வு கட்டணம் ஒரு மனைக்கு ரூ.500/— வீதம் 11X500 /— ரூ. 5500 Online-ல் செலுத்தப்பட்டுள்ளது.
8. விற்பப்பட்ட 20 மனைகளுக்கானகூராய்வு கட்டணம் ஒரு மனைக்கு ரூ.500/— வீதம், ரூ.10,000/— ஐ சிண்டி கேட் வங்கி S.B. A/C .No.62552200006638 வேலூர் கிளையில் மேற்படி விற்கப்பட்ட மனை உரிமையாளர்களிடம் தனித்தனியே பெறப்படும் போது அதன் விவரத்தினை நகர ஊரமைப்பு துணை இயக்குநர், வேலூர் அவர்களுக்கு அளிக்க வேண்டும்.
9. செலுத்தப்பட வேண்டிய கட்டணங்கள்

I. வரன்முறைப்படுத்துதல் கட்டணம்

விற்கப்படாத மனைகளுக்கு 1 ச.மீ—க்கு ரூ.60/— வீதம் மற்றும் விற்கப்பட்ட மனை உரிமையாளர்களிடம் தனித்தனியாக 1 ச.மீ ரூ.60/— வீதம் பெறப்படும்போது கீழ்காணும் அரசு கணக்கில் செலுத்தி அதன் விவரத்தினை நகர ஊரமைப்பு துணை இயக்குநர், வேலூர் அவர்களுக்கு அளிக்க வேண்டும்.

" 0217 - Urban Develoment
60 - Other Urban Develoment Scheme
800 - Other Receipts
AT - Receipt under Regularisation of Unapproved Layouts
& plots – DTCP
(DP CODE - 0217-60-800- AT 0007)

II. வளர்ச்சிக்கட்டணம் விறக்கப்படாத மனைகளுக்கு 1சமீக்கு ரூ. 150/–வீதம் மற்றும் விற்கப்பட்ட மனை உரிமையாளர்களிடம் தனித்தனியாக 1 ச.மீ ரூ. 150/– வீதம் பெறப்படும்போது சம்பந்தப்பட்ட உள்ளாட்சி கணக்கில் செலுத்தி அதன் விவரத்தினை நகர ஊரமைப்பு துனை இயக்குநர் வேலூர் அவர்களுக்கு அளிக்க வேண்டும். இந்தத் தொகை அந்த மனைபிரிவில் சாலைகள் அடிப்படை வசதிகள் செய்ய மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

10 சார் பதிவாளர் பொறுத்த வரை சாலை மற்றும் பொது ஒதுக்கீடு இடமானது இம்மனைப்பிரிவு வரைபடம் பெறப்பட்டதும் இத்திட்ட விதிகளின்படி நகராட்சிக்கு உரிமையானதாக பதிவு செய்தல் வேண்டும்.

11 உதவி இயக்குநர், நில அளவை மற்றும் நில பதிவேடுகள் துறையை பொறுத்தவரை சாலை மற்றும் பொது ஒதுக்கீடு இடங்கள் இம்மனைப்பிரிவு வரைபடம் பெறப்பட்டதும் திட்ட விதிகளின்படி நகராட்சிக்கு உரிமையானதாக கருதி நில அளவை ஆவணங்களில் உட்பிரிவு மற்றும் நில உரிமை மாற்றம் ஆகியவற்றை மேற்கொள்ள வேண்டும்.

12 அ) உள்ளாட்சி அமைப்புகளை பொறுத்த வரை மேற்கூறியவாறு பதிவுத்துறை மற்றும் நில அளவைத்துறை ஆகியவற்றில் உரிய பணிகள் மேற்கொள்வதற்கு ஒத்துழைத்து இப்பணிகள் முடிக்கப் பெற்று விவரங்களை நகர ஊரமைப்பு துணை இயக்குநர், வேலூர் அவர்களுக்கு தெரிவிக்க வேண்டும்.

ஆ) இம்மனைபிரிவியின் மனைகள் வரன் முறைப்படுத்த சம்மந்தப்பட்ட மனை உரிமையாளர்கள் / மனைப்பிரிவு உரிமையாளர்களிடமிருந்து விண்ணப்பம் பெறப்படும் போது நகர ஊரமைப்பு துறையால் கொள்கை அளவில் வரன்முறைப்படுத்தி ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைப்படுத்ததில் உள்ளவாறு மனையின் அளவுகள் உள்ளதா என்பதை ஒப்பிட்டு பார்த்து அனுமதி அளித்துள்ள விவரத்தினை இத்திட்டத்திற்கான வலைதளத்தில் பதிவேற்றம் செயவதுடன் உத்திரவு நகலினை அலுவலக ஒப்புதல் முத்திரையுடன் கூடிய வரைபடத்துடன் மனுதாரருக்கு அனுப்புதல் வேண்டும்.

13. விற்கப்படாத மனைகளுக்கான 10% ஒதுக்கீட்டிற்கு மனை எண்.09 பொது ஒதுக்கீடு திறவிடத்திற்கென மாறுதல் செய்யப்பட்டுள்ளது.

**அலுவலக குறிப்பு: மன்றம் பதிவு செய்யலாம்**

ந.க.எண்.116/2018/எப்1

**பொருள் எண் :16**

அரக்கோணம் நகராட்சியின் வார்டு மறு வரையறை முன்மொழிவுகள் படிவங்கள் மற்றும் வரைபடங்கள் ஆகியவைகளை தமிழ் நாடு வார்டு மறு வரையறை ஆணையத்தின்ஒப்புதலின்படி பொதுமக்கள் பார்வைக்கு நகராட்சி அலுவலகத்தில் வெளியிடப்பட்ட விவரத்தினை 31.12.2017 தேதி அன்று தினமணி, தினதந்தி ஆகிய தினசரி நாளிதழ்களில் விளம்பரம் செய்ததற்கு ரூ. 6149/–ம் மற்றும் ஆங்கில தினசரி நாளிதழான தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்ல் விளம்பரம் செய்ததற்கு விளம்பர கட்டணம் ரூ. 49,140/–ம் சேர்த்து விளம்பர தொகை ரூ. 55,289/–ஐ Elegant Publicities சென்னை அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு: **Elegant Publicities நிறுவனம் அவர்களுக்கு விளம்பரக்கட்டணம் ரூ. 55289/-ஐ வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண்.1164/2018/எப்1)**

**பொருள் எண் :17**

இந்நகராட்சியில் பொதுசுகாதாரப்பிரிவில் குப்பைகள் அகற்ற வாகனங்கள் போதிய அளவில் இல்லாத காரணத்தால் வாலாஜா அக்ரோ நிறுவனத்தின் மூலம் ஒரு வாடகை டிராக்டர் நாள் ஒன்றுக்கு ரூ. 1650/- வீதம் டிசம்பர் 2017 மாதம் வரை பயன்படுத்தி கொள்ள நகரமன்ற தீர்மான எண் 211 நாள் 31.10.2017 ல் அனுமதி பெறப்பட்டு தொடர்ந்து பயன்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது ஜனவரி 2018ம் மாதம் முதல் மார்ச் 2018 ஆம் மாதம் வரை ஒரு வாடகை டிராக்டர் பயன்படுத்தி கொள்ளவும், அதற்கான தோராய செலவினம் ரூ. 1.50 லட்சத்திற்கும் நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : **தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒரு வாடகை டிராக்டர் பயன்படுத்தப்பட்டு வருவதற்கும், மற்றும் அதற்கான தோராய செலவினம் ரூ. 1.50 லட்சத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.**

**(ந.க.எண்919/எச்1/2015)**

**பொருள் எண் :18**

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் ஒப்பந்த அடிப்படையில் Froza Enterprises Pvt,Ltd., Chennai நிறுவனத்தின் மூலம் 7 ஓட்டுநர்கள் மாவட்ட ஆட்சித்தலைவர், வேலூர், அவர்களின் தினக்கூலி அடிப்படையில் பணி செய்து வருகின்றனர். தற்போது Froza Enterprises Pvt,Ltd., Chennai நிறுவனத்தின் பணி உத்திரவு 31.03.2018 தேதியுடன் முடிவடைவதால் 2018–2019 ஆம் ஆண்டிற்கு ஒப்பந்த அடிப்படையில் 8 ஓட்டுநர்கள் மாவட்ட ஆட்சித்தலைவர், வேலூர், அவர்களின் தினக்கூலி அடிப்படையில் பணியில் ஈடுபடுத்திடவும், அப்பணியாளர்களுக்கான ஊதியம், மற்றும் சேமநல நிதி பிடித்தம் உட்பட ஒருவருக்கான செலவு விவரம் பின்வருமாறு.

| | | | |
|---|---|---|---|
| 1. | தினக்கூலி ரூ. 363/- x 30 நாட்கள் | = | 10890.00 |
| 2. | சேமநல நிதி ( 12.00%) | = | 1307.00 |
| 3. | வருங்கால வைப்பு நிதி ( 4.75%) | = | 517.00 |
| | மொத்தம் ரூ. | | **12714.00** |

1 ஓட்டுநருக்கான மாத ஊதியம் = ரூ.12,714/–

8 ஓட்டுநர்களுக்கான 12 மாத ஊதியம் = **12714 X 8 X 12** = ரூ.12,20,544/–

எனவே ஏப்ரல் 2018 முதல் மார்ச் 2019 வரையிலான ஒரு வருட காலத்திற்கான செலவுத்தொகை ரூ.12.50 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டியும், மேலும் இப்பொருள் தொடர்பாக நாளிதழில் விளம்பரம் செய்வதற்கும்,அதற்கான செலவினத்தொகைக்கும், 2018–2019 ஆம் ஆண்டிற்கான ஒப்பந்தப்புள்ளி கோரிடவும், மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : **2018–2019 ஆம் ஆண்டிற்கு தினக்கூலி அடிப்படையில் ஓட்டுநர்களை ஈடுபடுத்திடவும் அதற்கான ஒப்பந்தப்புள்ளி கோரிடவும், உத்தேச செலவுத்தொகை ரூ.12.50 லட்சத்திற்கும், மன்றம் அனுமதிக்கலாம்.**

**(ந.க.எண்484/எச்1/2018)**

**பொருள் எண் :19**

நகராட்சிப்பகுதிகளில் உள்ள நகராட்சி பள்ளிகள் மற்றும் அரசுப் பள்ளிகளில் கழிப்பறை சுத்தம் செய்தல் மற்றும் தூய்மை பணிகளை மேற்கொள்ளுதல் போன்ற பணிகளுக்கு பணியாளர்களை நியமித்தல் குறித்து வெயிடப்பட்டுள்ள அரசாணைகளான 1) அரசாணை (நிலை) எண்.166 நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் (MA.IV) துறை நாள். 23.11.2016 மற்றும் அரசாணை (நிலை) எண்.77 பள்ளிக்கல்வி (ப.க.4 (1) த் துறை நாள் 13.04.2015 ஏற்கனவே மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்பட்டு நகரமன்ற தீர்மான எண் 76 நாள்: 28.02.2017–ல் ஒப்புதல் வழங்கப்பட்டது.

அரசாணை (நிலை) எண்.166 நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் (MA.IV) துறை நாள். 23.11.2016–ல் தெரிவித்தவாறு நகராட்சி பகுதிகளில் உள்ள 10 நகராட்சி பள்ளிகள் மற்றும் 2 அரசுப் பள்ளிகளில் கழிப்பறை சுத்தம் செய்தல் மற்றும் தூய்மைப்பணிகளை மேற்கொள்ளுதல் போன்ற பணிகளுக்கு பணியாளர்களை நியமித்தல் குறித்து ஒப்பந்தப்புள்ளி கோரி தற்போது 14 தற்காலிக பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர், அவர்களின் பணி உத்திரவு 31.03.2017 தேதியுடன் முடிவடைவதால் 2018–2019 ஆம் ஆண்டிற்கு நகராட்சிப்பகுதிகளில் உள்ள மேற்படி 12 பள்ளிகளில் கழிப்பறை சுத்தம் செய்தல் மற்றும் தூய்மைப்பணிகளை மேற்கொள்ள பணியாளர்களின் நியமனத்திற்கு நாளிதழில் விளம்பரம் செய்யவும், அதற்கான விளம்பர கட்டணத்திற்கும், மற்றும் மாவட்ட ஆட்சியர், வேலூர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 687/2017 நாள்:25.05.2017ல் நிர்ணயித்தபடி ஊதியம், சேமநல நிதி பிடித்தம் மற்றும் கிருமி நாசினி பொருட்கள் உட்பட 14 பணியாளர்களுக்கு 01.04.2018 முதல் 31.03.2019 வரை உத்தேச செலவின தொகை ரூ.14.50 லட்சம் கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும், அதற்கான ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கும், மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு: 2018–2019 ஆம் ஆண்டிற்கு நகராட்சிப்பகுதிகளில் உள்ள மேற்படி 12 பள்ளிகளில் கழிப்பறை சுத்தம் செய்தல் மற்றும் தூய்மைப்பணிகளை மேற்கொள்ள பணியாளர்களின் நியமனத்திற்கு (14 பணியாளர்கள்) நாளிதழில் விளம்பரம் செய்யவும், அதற்கான விளம்பர கட்டணத்திற்கும், உத்தேச செலவின தொகை ரூ.14.50 லட்சம் கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும், மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கும், மன்றம் அனுமதிக்கலாம்.**

**(ந.க.எண்483/எச்1/2018)**

**பொருள் எண் :20**

அரக்கோணம் நகராட்சி 36 வார்டுகளை உள்ளடக்கி 9.06 கிலோ மீட்டர் சுற்று பரப்பளவு கொண்டும் மற்றும் சென்னையிலிருந்து வட மாநிலங்களுக்குச் செல்லும் ரயில்கள் வந்து செல்லும் முக்கிய நகரமாகும். இந்நகரம் 79029 மக்கள் தொகையும், 21398 குடும்பங்களையும், 3300 வியாபார நிறுவனங்களையும் கொண்டுள்ளது. மேலும் இந்நகரம் முக்கிய இரயில்வே போக்குவரத்து முனையமாக இருப்பதால் நாளொன்றுக்கு சுமார் 25000 மக்கள் இந்நகருக்குள் வந்து செல்கின்றனர். இந்நகரில் 11 கல்யாண மண்டபமும், 1 அரசு மருத்துவமனையும், 1 நகராட்சி நகர் நல மையமும், மற்றும் 10 தனியார் மருத்துவமனையும் உள்ளன.

இந்நகராட்சியில் மொத்தம் நாளொன்றுக்கு 32 டன் குப்பைகள் உருவாகின்றன தற்போது இந்நகராட்சியில் உள்ள 126 துப்புரவு பணியாளர்களை கொண்டு முழுமையாக அப்புறப்படுத்த முடியாத காரணத்தினால் இந்நகராட்சிக்கு கூடுதலாக மாவட்ட ஆட்சியரால் நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி அடிப்படையில் 129 பணியாளர்களை தனியார் ஒப்பந்ததாரர் (Outsourcing) மூலம் பயன்படுத்திக் கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை, அவர்களின் செயல்முறை கடித ந.க.எண்.19968/P3/2016 நாள்:31.08.2016ல் உத்தரவு அளித்துள்ளார். அதன் பேரில் இந்நகராட்சியின் நிதி நிலைமையை கருத்தில் கொண்டு தனியார் ஒப்பந்ததாரர் (Outsourcing) மூலம் 81 பணியாளர்களை கொண்டு துப்புரவு பணிகளை மேற்கொள்ள மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது. மாவட்ட ஆட்சியர் அவர்களின் தினக்கூலி அடிப்படையில் மேற்படி 81 பணியாளர்களுக்கான ஊதியம் மற்றும் இதரசெலவினங்கள் பின்வருமாறு.

1. ஊதியம் : 81 பணியாளர்கள் X ரூ.308/– X 30 நாட்கள் = 7,48,440/–
2. PF 12.00 % : ரூ.36.96/– X 81 பணியாளர்கள் X 30 நாட்கள் = 89813/–
3. ESI 4.75% : ரூ.14.63/– X 81 பணியாளர்கள் X 30 நாட்கள் = 35551/–
4. ST 5.00% : ரூ.15.40/– X 81 பணியாளர்கள் X 30 நாட்கள் = 37,422/–

ஒரு மாதத்திற்குரிய தொகை **மொத்தம் ரூ. 9,11,226/–**

5. சீருடைகள் ரூ.1800 X 81 பணியாளர்கள் X ஒருவருடத்திற்கு = 1,45,800/–
6. பாதுகாப்பு
   உபகரணங்கள் ரூ.2750 X 81 பணியாளர்கள் X ஒருவருடத்திற்கு = 2,22,750/–

**மொத்தம் ரூ.3,68,550/–**

ஒரு மாதத்திற்குரிய **மொத்தம்** தொகை **ரூ.3,68,550/–/12 மாதம் = 30,712/–**

**ஒரு மாதத்திற்கான ஊதிய செலவு ரூ.9,11,226/–**
**ஒரு மாதத்திற்கான இதர செலவு ரூ.30,712/–**
**மொத்தம் ரூ.9,41,938/–**

15 மாதத்திற்கான மொத்த செலவு **ரூ.9,41,938** X 15 மாதங்கள் = **ரூ1,41,29,070/–**

மேற்கண்ட விவரப்படி 81 பணியாளர்களை தனியார் ஒப்பந்ததாரர் (Outsourcing) மூலம் 15 மாதத்திற்கு பயன்படுத்திக்கொள்ளவும் அதற்கான தோராய செலவினத்தொகை ரூ.1.45/–கோடிக்கு மன்றத்தின் அனுமதியும் , ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கும் மற்றும் இப்பணி குறித்து மாநில அரசிதழில் பிரசுரம் செய்யவும், அதற்கான செலவினத்தொகைக்கும், மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு : 1. ஒப்பந்தப்புள்ளி கோரி ஒப்பந்ததாரரை தேர்வு செய்ய முன்அனுமதி பெற்றமைக்கு மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.**
**2.மேற்கண்ட பணிக்கான தோராய செலவினத் தொகைக்கு மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.**
**3.ஒப்பந்தப்புள்ளி மாநில அரசிதழில் பிரசுரம் செய்யும் பணிக்கும்,அதற்கான செலவினத்திற்கும் மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.**

**(ந.க.எண்.826/எச்1/2015)**

**பொருள் எண் :21**

இந்நகராட்சியில் பொதுசுகாதாரப்பிரிவில் இயங்கி வரும் திடக்கழிவு மேலாண்மை பயன்பாட்டிற்காக பயன்படுத்தப்படும் கீழ்காணும் வாகனங்களுக்கு 2018–19 ஆம் ஆண்டிற்கான காப்பீடு (**INSURANCE**) **The New India Assurance Co Ltd, Arakkonam** அவர்களின் மூலம் காப்பீடு புதுப்பித்து கொள்ளவும், அதற்கான தோராய செலவினம் ரூ.3.50 லட்சத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| S NO | VEHICLE NUMBER | VEHICLE DETAILS |
|---|---|---|
| 1 | TN73W2316 | TIPPER LORRY |
| 2 | TN23AS6296 | DUMPER PLACER LORRY |
| 3 | TN23AS6307 | TIPPER LORRY |
| 4 | TN73V5358 | DUMPER PLACER LORRY |
| 5 | TN23X 6607 | TIPPER LORRY |
| 6 | TN73W2299 | DUMPER PLACER LORRY |
| 7 | TN23AR7435 | FRONT END LOADER (JCB) |
| 8 | TN73V9270 | DOG TRAVALLING VEHICLE |

| | | |
|---|---|---|
| 9 | TN73R 2325 | TATA ACE MINI TIPPER VAN |
| 10 | TN73R 2340 | TATA ACE MINI TIPPER VAN |
| 11 | TN73R 2353 | TATA ACE MINI TIPPER VAN |
| 12 | TN73R 2355 | TATA ACE MINI TIPPER VAN |

**அலுவலக குறிப்பு :** **மேற்படி பன்னிரண்டு வாகனங்களுக்கு 2018–19 ஆண்டிற்கான காப்பீடு (INSURANCE) The New India Assurance Co Ltd, Arakkonam அவர்களின் மூலம் காப்பீடு புதுபித்து கொள்ளவும், அதற்கான தோராய செலவினம் ரூ.3.50 லட்சத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்**

**(ந.க.எண்485/எச்1/2018)**

**பொருள் எண் :22**

இந்நகராட்சியில் பொதுசுகாதாரப்பிரிவில் இயங்கி வரும் திடக்கழிவு மேலாண்மை பயன்பாட்டிற்காக பயன்படுத்தப்படும் கீழ்காணும் வாகனங்களுக்கு 2018–19 ஆம் ஆண்டிற்கான சாலைவரி மற்றும் பசுமை வரி செலுத்திடவும், அதற்கான தோராய செலவினம் ரூ.60,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது

| S NO | VEHICLE NUMBER | VEHICLE DETAILS |
|---|---|---|
| 1 | TN73W2316 | TIPPER LORRY |
| 2 | TN23AS6296 | DUMPER PLACER LORRY |
| 3 | TN23AS6307 | TIPPER LORRY |
| 4 | TN73V5358 | DUMPER PLACER LORRY |
| 5 | TN23X 6607 | TIPPER LORRY |
| 6 | TN73W2299 | DUMPER PLACER LORRY |
| 7 | TN23AR7435 | FRONT END LOADER (JCB) |
| 8 | TN73V9270 | DOG TRAVALLING VEHICLE |
| 9 | TN73R 2325 | TATA ACE MINI TIPPER VAN |
| 10 | TN73R 2340 | TATA ACE MINI TIPPER VAN |
| 11 | TN73R 2353 | TATA ACE MINI TIPPER VAN |
| 12 | TN73R 2355 | TATA ACE MINI TIPPER VAN |

அலுவலக குறிப்பு : **மேற்படி பன்னிரண்டு வாகனங்களுக்கு 2018–19 ஆண்டிற்கான சாலைவரி மற்றும் பசுமை வரி செலுத்திடவும், அதற்கான தோராய செலவினம் ரூ.60,000/–க்கு மன்றம் அனுமதிக்கலாம்.**

**(ந.க.எண்486/எச்1/2018)**

**பொருள் எண் :23**

அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.08 பகுதியில் காலிவாரி கண்டிகை குறிஞ்சு நகர் இணைப்பு சாலையில் நகராட்சி குடிநீர் மேல்நிலை நீர் தேக்க தொட்டி அருகில் மழைநீர் கால்வாய் மற்றும் சிறுபாலம் பழுது அடைந்து அப்பகுதியில் மழைநீர் தேங்கி சுகாதார சீர்கேடாகவும், பொதுமக்களுக்கு போக்குவரத்து இடையூறாக உள்ளது. எனவே அப்பகுதியில் சிறுபாலம் மற்றும் மழைநீர் கால்வாய் கட்ட தோராய மதிப்பீடு ரூ.2.70 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது. பணியின் அவசியம் கருதி மேற்கண்ட பணிக்கான மதிப்பீடு ரூ, 2.70 இலட்சத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.**

**பொருள் எண்.24**

நகராட்சிக்கு சொந்தமான தெருவிளக்கு பராமரிப்பு வாகனம் ஹைட்ராலிக் லேடர் வண்டி எண்.TN73W8881–க்கு **2018** ஆம் ஆண்டிற்கு தகுதி காண் சான்று (Fitness Certificate) பெறுவதற்கு வாகனத்தில் உள்ள பழுதுகளை சரி செய்யவும், வருடாந்திர காப்பீட்டு பிரிமியம் செலுத்தவும் மற்றும் சாலை வரி கட்டணம் செலுத்தவும் தோராய செலவினம் ரூ.**2.00** இலட்சத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள நகரமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு: மன்றம் பதிவு செய்யலாம்**

**ந.க.எண்.1414/2014/இ1**

**ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்**
**அரக்கோணம் நகராட்சி**

**அரக்கோணம் நகராட்சி**

**28.02.2018 அன்று நடைப்பெற்ற சாதரண கூட்டத்தின் மன்ற தீர்மான எண். 294 ன்உண்மை நகல்**

அரக்கோணம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு.A, பிளாக்.2, ந.அ.எண்கள், . 10/1பி1, 1பி2, 1பி4, 3,4 மற்றும் 10/5–ல் உள்ள 1.33¾ ஏக்கர் பரப்பளவிலான இடத்தில் அமைக்கப்பட்டுள்ள அனுமதியற்ற மனைப்பிரிவினை ம.வ/ந.ஊ.து.இ (வே.ம) வரன்முறைப்படுத்துதல் எண். 51 (R) /2018 என எண்ணிட்டு கீழ்கண்ட நிபந்தனைளுடன் கொள்கை அளவிலான மனைப்பிரிவு ஒப்புதல் அளித்து வரப்பெற்றுள்ள நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ) வேலூர் மண்டலம் அவர்களின் கடிதம் ந.க.எண்.2243/2017/வேம3 நாள். 19.01.2018 நகர மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

2. மனைப்பிரிவு மொத்த பரப்பு : 58261.50 சதுர அடி (அ) 5414.63 ச.மீ (அ) 1.33 ¾ ஏக்கர்

2 மனைப்பிரிவில் அமைந்துள்ள மொத்த மனைகளின் எண்ணிக்கை : 31

3. விற்கப்பட்ட மனைகள் (1–3, 5, 10,11,15, 16, 16எ, 17, 17ஏ, 18–21, 21ஏ, 23–25 மற்றும் 27) : 20 (31990 சதுர அடி)

5 விற்கப்படாத மனைகள் 4, 6–9, 12, 12எ, 13,14, 22 மற்றும் 26. : 11 (16900 சதுர அடி)

5 விற்பனை செய்யப்படாத மனைகளுக்கான பூங்கா ஒதுக்கீடு இடம் (மனை எண்.09) : 1710.00 சதுர அடி (10.11 %)

13 விற்கப்படாத மனைப்பிரிவு சாலைகள் மற்றும் பூங்கா ஒதுக்கீடு இடங்கள் உள்ளாட்சிக்கு உரிமையானதாகும்.

14 Online Registration No. DTCP/L/0022791/2017 dated 31.10.2017 ன்படி விற்கப்படாத 11 மனைகளுக்கான கூராய்வு கட்டணம் ஒரு மனைக்கு ரூ.500/– வீதம் 11X500 /– ரூ. 5500 Online-ல் செலுத்தப்பட்டுள்ளது.

15 விற்பப்பட்ட 20 மனைகளுக்கானகூராய்வு கட்டணம் ஒரு மனைக்கு ரூ.500/– வீதம், ரூ.10,000/– ஐ சிண்டி கேட் வங்கி S.B. A/C .No.62552200006638 வேலூர் கிளையில் மேற்படி விற்கப்பட்ட மனை உரிமையாளர்களிடம் தனித்தனியே பெறப்படும் போது அதன் விவரத்தினை நகர ஊரமைப்பு துணை இயக்குநர், வேலூர் அவர்களுக்கு அளிக்க வேண்டும்.

16 செலுத்தப்பட வேண்டிய கட்டணங்கள்

III. வரன்முறைப்படுத்துதல் கட்டணம்

விற்கப்படாத மனைகளுக்கு 1 ச.மீ–க்கு ரூ.60/– வீதம் மற்றும் விற்கப்பட்ட மனை உரிமையாளர்களிடம் தனித்தனியாக 1 ச.மீ ரூ.60/– வீதம் பெறப்படும்போது கீழ்காணும் அரசு கணக்கில் செலுத்தி அதன் விவரத்தினை நகர ஊரமைப்பு துணை இயக்குநர், வேலூர் அவர்களுக்கு அளிக்க வேண்டும்.

“ 0217 - Urban Develoment
60 - Other Urban Develoment Scheme
800 - Other Receipts

AT - Receipt under Regularisation of Unapproved Layouts
& plots – DTCP
(DP CODE - 0217-60-800- AT 0007)

IV. வளர்ச்சிக்கட்டணம் விறக்கப்படாத மனைகளுக்கு 1சமீக்கு ரூ. 150/—வீதம் மற்றும் விற்கப்பட்ட மனை உரிமையாளர்களிடம் தனித்தனியாக 1 ச.மீ ரூ. 150/— வீதம் பெறப்படும்போது சம்பந்தப்பட்ட உள்ளாட்சி கணக்கில் செலுத்தி அதன் விவரத்தினை நகர ஊரமைப்பு துனை இயக்குநர் வேலூர் அவர்களுக்கு அளிக்க வேண்டும். இந்தத் தொகை அந்த மனைபிரிவில் சாலைகள் அடிப்படை வசதிகள் செய்ய மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

17 சார் பதிவாளர் பொறுத்த வரை சாலை மற்றும் பொது ஒதுக்கீடு இடமானது இம்மனைப்பிரிவு வரைபடம் பெறப்பட்டதும் இத்திட்ட விதிகளின்படி நகராட்சிக்கு உரிமையானதாக பதிவு செய்தல் வேண்டும்.

18 உதவி இயக்குநர், நில அளவை மற்றும் நில பதிவேடுகள் துறையை பொறுத்தவரை சாலை மற்றும் பொது ஒதுக்கீடு இடங்கள் இம்மனைப்பிரிவு வரைபடம் பெறப்பட்டதும் திட்ட விதிகளின்படி நகராட்சிக்கு உரிமையானதாக கருதி நில அளவை ஆவணங்களில் உட்பிரிவு மற்றும் நில உரிமை மாற்றம் ஆகியவற்றை மேற்கொள்ள வேண்டும்.

19 அ) உள்ளாட்சி அமைப்புகளை பொறுத்த வரை மேற்கூறியவாறு பதிவுத்துறை மற்றும் நில அளவைத்துறை ஆகியவற்றில் உரிய பணிகள் மேற்கொள்வதற்கு ஒத்துழைத்து இப்பணிகள் முடிக்கப் பெற்று விவரங்களை நகர ஊரமைப்பு துணை இயக்குநர், வேலூர் அவர்களுக்கு தெரிவிக்க வேண்டும்.

ஆ) இம்மனைபிரிவியின் மனைகள் வரன் முறைப்படுத்த சம்மந்தப்பட்ட மனை உரிமையாளர்கள் / மனைப்பிரிவு உரிமையாளர்களிடமிருந்து விண்ணப்பம் பெறப்படும் போது நகர ஊரமைப்பு துறையால் கொள்கை அளவில் வரன்முறைப்படுத்தி ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைப்படுத்ததில் உள்ளவாறு மனையின் அளவுகள் உள்ளதா என்பதை ஒப்பிட்டு பார்த்து அனுமதி அளித்துள்ள விவரத்தினை இத்திட்டத்திற்கான வலைதளத்தில் பதிவேற்றம் செயவதுடன் உத்திரவு நகலினை அலுவலக ஒப்புதல் முத்திரையுடன் கூடிய வரைபடத்துடன் மனுதாரருக்கு அனுப்புதல் வேண்டும்.

13. விற்கப்படாத மனைகளுக்கான 10% ஒதுக்கீட்டிற்கு மனை எண்.09 பொது ஒதுக்கீடு திறவிடத்திற்கென மாறுதல் செய்யப்பட்டுள்ளது.

**அலுவலக குறிப்பு: மன்றம் பதிவு செய்யலாம்**

ந.க.எண்.116/2018/எப்1

**மன்ற தீர்மான எண்.294** **நாள் 28.02.2018.**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது.**

**(ஒம்) திருமதி.கோ.கமலகுமாரி,பி.ஏ.,**
**ஆணையாளர் (ம)தனி அலுவலர்**
**அரக்கோணம் நகராட்சி**

**- உண்மை நகல் —**

**ஆணையாளர்**
**அரக்கோணம் நகராட்சி**

**<u>அரக்கோணம் நகராட்சி</u>**

**28.02.2018 அன்று நடைப்பெற்ற சாதரண கூட்டத்தின் மன்ற தீர்மான எண். 359 ன்உண்மை நகல்**

நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு வண்டி எண்.TN73W5969 என்ற வாகனத்திற்கு அவ்வப்போது ஏற்படும் பழுது வேலைகளை சரி செய்யவும் மற்றும் வருடாந்திர காப்பீட்டு பிரிமியம் செலுத்தவும் தோராய செலவினம் ரூ.2.00 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கும் தொகைக்கும் நகரமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண்.1410/14/இ1**

**மன்ற தீர்மான எண்.359** **நாள் 28.02.2018.**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது.**

**(ஒம்) திருமதி.கோ.கமலகுமாரி,பி.ஏ.,**
**ஆணையாளர் (ம)தனி அலுவலர்**
**அரக்கோணம் நகராட்சி**

**- உண்மை நகல் -—**

**ஆணையாளர்9பொ)**
**அரக்கோணம் நகராட்சி**